

எனக்குப் பிடித்த இடம் எது என்று உங்களுக்குத் தெரியுமா?
என்னுடன் வாருங்கள்! அந்த இடத்தைப்பற்றி மேலும்
தெரிந்துகொள்வோம். உங்களுக்கும் அந்த இடம் பிடிக்கும்.

ISBN 978-981-012-809-8

Marshall Cavendish Education

Ministry of Education
SINGAPORE

PEBBLES / DREWSCAPE

எனக்குப் பிடித்த இடம்

MINISTRY OF EDUCATION

# எனக்குப் பிடித்த இடம்

மூலக்கதை
PEBBLES

ஓவியர்
DREWSCAPE



# எனக்குப் பிடித்த இடம்

## இந்தப் புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்தலாம்?

பிள்ளைகள் இயற்கையிலேயே துருவி ஆராயும் இயல்பு கொண்டவர்கள். அவர்களின் இந்த இயல்பை **வளர்ப்பதும் நிலைநிறுத்துவதும்** அவர்களை வாழ்நாள் கற்றலுக்குத் தயார் செய்யும். தங்களைச் சுற்றி நடப்பனவற்றைக் கண்டு வினா எழுப்பும்போது, அவ்வாறான நிகழ்வுகளுக்கான காரணங்களையும் அவை எவ்வாறு நிகழ்கின்றன என்பதையும் அறிந்துகொள்கிறார்கள்.

இக்கதையில் வரும் சிறுமி சுற்றுப்புறத்தில் நடப்பதை அறிந்துகொள்ள ஆர்வம் காட்டுகிறாள்.
அவள் தன் ஐம்புலன்களையும் கொண்டு ஆராய்கிறாள். அது தொடர்பான கேள்விகளைக் கேட்டுப் பலவற்றைப் புரிந்துகொள்ள விழைகிறாள். நீங்கள் இக்கதையைப் பிள்ளைகளுக்குப் படித்துக்காட்டும்போது அதன்மூலம் ஒன்றைப்பற்றி ஆராய்ந்து அறிவது குறித்து எடுத்துரைக்கலாம். சில பரிந்துரைகள் பின்வருமாறு:

### ஒன்றைப்பற்றி அறியும் ஆர்வத்தைப் பிள்ளைகள் கண்டுகொள்வதற்கு உதவப் பின்வரும் கேள்விகளைக் கேட்கலாம்:

- *அந்தச் சிறுமி எதைப் பார்த்தாள் / கேட்டாள் / நுகர்ந்தாள்? அவள் ஐம்புலன்களில் எதனைப் பயன்படுத்திச் சுற்றுப்புறத்தில் நடப்பதை அறிந்துகொண்டாள்?*
- *அவள் ஏன் எப்போதும் கேள்வி கேட்டுக்கொண்டே வாக்கியத்தைத் தொடங்கினாள்?*

### ஒன்றைப்பற்றி அறியும் ஆர்வத்தைப் பிள்ளைகள் மதிப்பதற்கும் கடைப்பிடிப்பதற்கும் உதவப் பின்வரும் கேள்விகளைக் கேட்கலாம்:

- *அந்தச் சிறுமி தன் கேள்விகளுக்குப் பதில் காண என்ன செய்யலாம் என்று நீ நினைக்கிறாய்?*
- *உனக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அவற்றுக்கு நீ எவ்வாறு பதில் காண்பாய்?*
- *உன் கேள்விகளுக்குப் பதில் கிடைத்துவிட்டால் உனக்கு எப்படி இருக்கும்?*



# எனக்குப் பிடித்த இடம்

மூலக்கதை: **Pebbles**
ஓவியர்: **Drewscape**



Ministry of Education
SINGAPORE


5

என்னோடு வாருங்கள்! எனக்குப் பிடித்த
இடத்துக்குப் போகலாம்.





அது என்ன இடம் என்று தெரியுமா?



அங்கே வானவில்லின் நிறங்களைப் பார்க்கலாம்.



அங்கே பலர் அரைக் காற்சட்டையும் செருப்பும்
அணிந்து வருவார்கள்.



அவர் கழுத்தில் ஏன் துண்டு இருக்கிறது?




அந்த இடம் சத்தமாக இருக்கும்;
பலர் பல மொழிகளில் பேசுவார்கள்.




அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்?




அங்கே முட்டைகளை உடைக்கும் சத்தம் கேட்கும்.
தட்டுகள் அடுக்கும் சத்தமும் கேட்கும்.



என் மீனுக்குக்கூட அந்தச் சத்தம் கேட்குமோ?



அந்த இடத்துக்குப் போனாலே பசி எடுக்கும்!
நல்ல மணமாகவும் இருக்கும்.



ம்ம்ம்... என்ன மணம்! என்ன மணம்! ம்ம்ம்...



அந்த இடம் கூட்டமாக இருக்கும்.
பலர் வரிசையில் பொறுமையாகக் காத்து நிற்பார்கள்.




அவர்கள் என்ன நினைத்துக்கொண்டு நிற்பார்கள்?



அங்கு எச்சில் ஊற வைக்கும் இனிப்பு வகைகளைப் பார்க்கலாம்.



அவற்றை எல்லாம் ஒன்றாகக் கலந்தால் எப்படி இருக்கும்?



அந்த இடம் பரபரப்பாக இருக்கும். அதோ! ஒருவர்
தேநீரை ஆற்றுகிறார். அது அருவிபோல் ஊற்றுகிறது.



எப்படிச் சிந்தாமல் அவரால் தேநீரை ஆற்ற முடிகிறது?




பறவைகள்கூட விரும்பிச் செல்லும் இடம் அது.




நான் பறவையாக இருந்தால் அங்குப் பறக்கும்போது
எவற்றைப் பார்ப்பேன்?

அது என்ன இடமாக இருக்கும்?


அது
உணவகமா?
MENU
MENU


அது இரவுச் சந்தையா?
$1

அது...


天海鸡饭
TIAN HAI CHICKEN RICE
FRIED KWAY TEOW
炒粿条
NASI LEMAK SEDAP
客家酿豆腐
HAKKA YONG TAU FOO
Wen's Grill
潮州鱼圆面
Teochew Fishball Mee


உணவு
நிலையம்!
PORRIDGE
好吃甜品
YUMMY DESSERTS
MUTHU'S PRATA
Delicious
TEH TARIK STALL

## எழுத்தாளரைப்பற்றி

Pebbles என்பது தங்களாலும் எழுத்தாளர்களாக முடியும் என்று கண்டறிந்த ஒரு குழுவினராவர். அவர்கள் தங்களுக்குப் பிடித்த இடத்தில் ஒன்று சேர்ந்து மதிய உணவை உண்பர். (உங்களுக்கு ஒரு குறிப்பு: அந்த இடம் சியோன் சாலையில் உள்ளது!)
இந்தப் பிரத்தியேகமான இடத்தில் அவர்களுக்குப் பிடித்த உணவுகளான char kway teow, கோழிச் சோறு, இறால் நூடல்ஸ் ஆகியவற்றை உண்பர். பின்னர், அவர்கள் ஐஸ் கச்சாங்கைச் சாப்பிடுவர்.

## ஓவியரைப்பற்றி

Andrew Tan (Drewscape) சிங்கப்பூர் ஓவியர் ஆவார். அவருக்கு வாசிப்பதும் கேலிச்சித்திரம் வரைவதும் மிகவும் பிடிக்கும். அங்காடிக் கடைகளில் தேர்ந்தெடுப்பதற்குப் பலவகையான உணவு வகைகள் இருப்பதால் அவருக்கு அங்குச் சாப்பிடப் பிடிக்கும். எலும்பில்லாக் கோழிச் சோறும் அவிக்கப்பட்ட டம்பிலிங்ஸும் அவருக்கு விருப்பமான உணவு வகைகளாகும்.

**Acknowledgements**
We would like to express our appreciation to the following parties for their contribution and assistance in making this publication possible:

- Mdm Mubarak Begum w/o Mohamed Siddiqe of Jamiyah Kindergarten, Mdm Arunhachelam Shanthi, Mdm Pandiyaraja Ramathilagam and Mdm Sujatha Pragatheeswaran of Ramakrishna Mission Sarada Kindergarten, and Mdm Chettiar Alagumalliga of Saraswathy Darma Muneeswaran Kindergarten; and
- Curriculum Planning and Development Division, MOE.

**© 2014, Ministry of Education**
**Republic of Singapore**

**Published by Marshall Cavendish Education**
*An imprint of Marshall Cavendish International (Singapore) Private Limited*
Times Centre, 1 New Industrial Road, Singapore 536196
Customer Service Hotline: (65) 6213 9444
E-mail: tmesales@sg.marshallcavendish.com
Website: www.marshallcavendish.com/education

Marshall Cavendish is a trademark of Times Publishing Limited.

First published 2014

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval systerm, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying or otherwise, without prior permission of the copyright holder.

ISBN 978-981-01-2809-8

Printed in Singapore by Times Printers, www.timesprinters.com

Designed by ampulets